https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# டி.செல்வராஜின் தோல் புதினத்தில் மொழிநடை

**கி. அன்பரசி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை

**முனைவர் ச. வனிதா**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002

*முன்னுரை*

இலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலக்கட்டத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவ்வக்காலங்களில் நிகழ்கின்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. டி. செல்வராஜ் அவர்கள் அவர் வாழ்ந்த சூழலின் நிகழ்வுகளுக்கு எழுத்துரு தந்துள்ளார். தன் மன குமுறலுக்க வடிகாலாய் வடிவமைத்துள்ளார். இந்நாவல் மிகப்பெரிய நாவலாக உள்ளது. 695 பக்கங்களைக் கொண்டுள்ளது. 117 கதாப்பாத்திரங்களுடன் படைக்கப்பட்டுள்ளது. நாவலின் மொழிநடை அதனது உள்ளீட்டை உணர்வதற்குரிய தளமாக அமைகிறது. எனவே தோல் நாவலின் மொழி நடையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இலக்கிய உலகினில் அதிகமாகப் பயின்றுவரும் சொல் ‘நடை’ என்பதாகும். ஒரு படைப்பாளியை இனங்கண்டு கொள்வதற்கு நடையியல் உத்திகள் பெரிதும் பயன்படும். நடை என்பதற்கு உன்க்விஸ்ட் மூன்று இலக்கணத்துடன் விளக்குகிறார். அவை, 1. எண்ணம் அல்லது கருத்து என்னும் கருவினைச் சுற்றி அமைந்துள்ள கரு உரு. 2. வேறுபட்ட வடிவங்களுக்கிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி. 3. ஒரு படைப்பாளியின் அல்லது படைப்பு இலக்கியத்தில் காணப்படும் தன்மை கூறுகளின் ஒட்டுமொத்தம் என்பதாகும். ஆசிரியரின் உள்ள பண்புகளுக்குகு ஏற்ற ஒலி நயமும் பொருளுணர்ச்சியும் உடைய சொற்களைத் தேர்ந்து ஆளும் காரணத்தால் அவர் எழுதும் இலக்கியத்தின் நடை வேறுபாடு அடைகிறது என்கிறார் மு. வரதராசனார். படைப்பாளியின் உணர்ச்சி நடை அனுபவங்களின் பாதிப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இந்நடைக் கூறுகள் மாறுபடுகின்றன.

டி. செல்வராஜ் தமது படைப்புகளில் எளிய நடையைப் பயன்படுத்தியுள்ளார். அதிகமாக அவரது வட்டார வழக்கச் சொற்களை பயன்படுத்தியுள்ளார். ஆசிரியர் தாமே கதை நிகழ்வுகளைக் கூறுவதை போன்றும் பாத்திரங்கள் உரையாடுவது போன்றும் படைத்துள்ளார். ஒரு புலவரின் நடை அவருடைய உள்ளத்தின் இயல்பை ஒட்டி அமைவதாகும். புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால் நடையில் ஆற்றல் மிகுதியாகும். அவரது உள்ளத்தில் துன்ப உணர்வு பெருகினாள் நடையில் சுவையும் கவர்ச்சியும் பெரும். ஆகையால் ஓர் ஆசிரியரை அவரது நடையை கொண்டு அறியலாம் என்பர். ஆசிரியரை வேறாகவும் நடையை வேறாகவும் பிரித்தரிய முடியாது. நடை அவருடைய உள்ளப் பண்போடு அவ்வளவு ஒன்று பட்டதாகும்.

ஓர் ஆசிரியரின் நடையைக் கடுமையான நடை என்கிறோம். இன்னொருவருடையதை எளிய நடை என்கிறோம். ஒன்றை விளக்கமான நடையாகவும் மற்றொன்றை

குழப்பமானதாகவும் கூறுகிறோம். மேலும் இனிமையான நடை அமைதியானது என்றும் கூறுவர். அவரவர் எழுதும் வாக்கியங்களில் இந்தப் பண்புகள் புலனாகும். இத்தகைய மொழிநடை குறித்து பல அறிஞர்கள் பல கருத்துக்களை கூறியுள்ளனர்.

நாவலில் கதைப்பொருள், பாத்திரப்படைப்பு, கதைப்பின்னல் என்ற மூன்றும் முக்கியக் கூறுகள் ஆகும். இம்மூன்றும் சிறந்து விளங்கத் துணை நிற்பது மொழிநடையே. நடைச்சிறப்பு இல்லையெனில் அந்நாவலைத் தொடர்ந்து வாசித்தல் தடைபடும், நாவல் நடையினை வைத்தே, நாவலாசிரியரை இனம் கண்டுவிட முடியும். ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு விதமான நடைப் பாங்கினைக் கையாள்வர்.

பொதுவாகப் பிற நாவலாசிரியர் நடையிலிருந்த இவ்வாசிரியரின் மொழிநடை பெரிதும் மாறுபட்டு கிடக்கிறது. வித்தியாசமாகவும் அமைகிறது. இவரது நாவலின் மொழிநிலையயில் தொன்மக் கூறுகள், விவிலிய நூல் குறிப்புகள், புராண இலக்கியக் குறிப்புகள், பழமொழிகள், உவமைகள், வாய்மொழிக் கதைக்கூறுகுள், வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவை மிகுந்து கிடக்கிறது.[1]

மேலும் தூய தமிழ்ச் சொற்கள், வட சொற்கள், வட்டார சொற்கள், பேச்சு வழக்கு, ஓரிது கொச்சைச் சொற்கள், ஆங்கிலச் சொற்கள் எனச் சொற்கள் விரவிக்கிடக்கிறது. இவையெல்லாம் நாவலின் கதைப்பின்னல் போக்கிற்கும், பாத்திரத்தின் தன்மைக்கும் ஏற்ப அமைகிறது. நாவலின் பாடுபொருளுக்குச் செறிவூட்டுகிறது. இம் மொழிநடையே இவரது நாவல் வெற்றிக்கு காரணிகள் ஆகும். இவரது மொழிநடைக்கு சில சான்றுகள் பின்வருமாறு,

### மொழிநடை

1927ஆம் ஆண்டுவாக்கில் பூனேயில் நடைபெற்ற அகில இந்திய பெண்கள் மகா நாட்டில் பெஸண்ட் அம்மையாரின் உதவியோடு கலந்து கொண்டு திரும்பிய பிறகு, அந்த இயக்கத்தின் முக்கிய பெண்மணிகளில் ஒருவராக கோதை நாச்சியார் கருதப் பட்டார்.[2]

### வட்டார வழக்கு

ஆசிரியரின் வட்டார வழக்குச் சொற்கள் நாவலின் பெரும்பாலான இடங்களில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

"அல்லாரும் சும்மா இருக்கையிலே ஒனக்க எதுக்குடா வம்பு தோல் ஸாப்புவன்லே நடக்காதை அலுவுசமாக நடந்து போச்சு, அது என்னா ஒனக்குச் சொந்தமா சுருத்தா பொத்திக் கிட்டுச் சும்மா கெடக்காம என்று மேஸ்திரி கூறுவதாக கூறுகிறார்"[3]

அடிமை என்னும் சாசனமாக எழுதிக் கொடுக்கும் நிலையை முறி எழுதிக் கொடுப்பதாகக் கூறுதலும், அவ்வாட்டாரச் சொற்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும் அறியமுடிகிறது.

### உவமை நடை

உவமை என்பது புரிந்து கொள்ளும் தன்மையை எளிதாக்கக் கூடியதாகும். இலக்கிய அணிகளில் தலையாயது உவமை அணி. இந்த உவமையையும் நடையின் கூறாகவே கருதப்படுகிறது. ஒரு பொருளை விளக்க கூறுவது உவமையாகும் என்பார் தமிழண்ணல். உவமைகள் பொருளோடு பொருள் புணர ஒப்புமை தோன்ற எளிய பொருட்களை உவமை கூறுவது ஆசிரியரின் தனித்தன்மையாகும் என்று கூறுவார். உவமை படைப்பாளியின் படைப்பின் ஆற்றலை உணர்த்தக் கருத்தியல் உணர்வின் எல்லையை வெளிப்படுத்தும் இந்நாவலில் உவமைகள் பல இடங்களில் கையாளப் பட்டுள்ளது. பெண்ணை மானபங்கம் செய்யத் தூக்கிச் செல்லும்போது,

"பருந்து கோழிக் குஞ்சியத் தூக்கிட்டு போரதாட்டம் பச்ச மண்ணெய தூக்கிட்டு போரான் என்கிறான். சின்னக்கிளி வெடன் கையில் சிக்கிய பறவையாகத் துடித்து கொண்டிருக்கிறாள்"

*"நரசிம்ம மூர்த்தியாக நின்ற ஓசேப்பின் தாக்குதலால் நிலை குலைந்து போனான் முஸ்தபா"*

*"முஸ்தபா திமிறிவிடக்கூடாது என்பதற்காக அவனை அறியாமலேயே வெட்டப்பட்ட ஆட்டுக்கிடாயைப் போன்று துடிதுடித்து நின்றவனை"*

*"வேடன் விட்ட அம்பாகப் பாய்ந்து மீன்களை கொத்திச்..."*[4]

முதலான பல இடங்களில் அழகிய உவமை நடையினை கையாண்டுள்ளார் ஆசிரியர்.

### பிறமொழியாக்க நடை

பிறமொழி கலப்பு நடை என்பது இன்று சாதாரணமாகிவிட்டது. சங்ககால இலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக கலந்து எழுதப்பட்டன. ஒருமொழி இலக்கியத்தினைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது சில சொற்கள் தமிழில் அப்படியே உள்ளவாறே பயன் படுத்தப்படுகின்றன. நாவலில் ஆசிரியர் வடமொழி,

"ஸ்டோர் ரூமிலிருந்து எழும் அவளது கதறல் அவனது இதயச் சுவர்களை..."

என்பதில் ஆங்கிலத்தைத் தமிழாக்கம் செய்துள்ளமையை அறியமுடிகின்றது.

“கணப்போது ஸ்தம்பித்துப் போய் நின்றாள்”

“ரூம் கதவை மோதினான்”

“தோல் ஷாப்பின் பின்புறம்”

“ஸ்டேஷன் மாஸ்டர் சுப்பிரமணி டியூட்டி உடையை மாற்றினார்”[5]

முதலான பிறமொழி சொற்களைக் கையாண்டிருப்பதைஉணரமுடிகிறது.

### பழமொழி நடை

நாட்டுப்புறக் கூறுகளுள் ஒன்று பழமொழி. பாமர மக்களும் எளிதில் ஏரிந்துக் கொள்ளக் கூடிய இப்பழமொழியை உருவாக்கியவர்கள் நாட்டுப்புற மக்களே. எழுத்தாளர்கள் தங்களது கருத்துக்களை எல்லாம் மக்களும் எளிதில் புரிந்து கொள்வதற்காகத் தம் படைப்புகளில் பழமொழியைக் கையாளுகின்றனர். இவ்வடிப்படையில் டி. செல்வராஜ் தன் கருத்துக்களை எளிதில் புரிய வைப்பதற்காகப் பழமொழிகளைக் கையாண்டுள்ளார்.

*“யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே”*

*“மொண்டி கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா”*

*“கையை ஊண்டி கரணம் போட்டுக் காலத்தை ஓட்டறவுக”*[6]

இதுபோன்ற பல பழமொழிச் சொற்களை நாவலின் பல இடங்களில் எளிய முறையில் வாழ்வியலோடு மக்கள் எதார்த்தமாகக் கூறுவதைப்போல் அமைத்துள்ளார்.

### அவல நடை

மனத்திலிருந்து வெளிப்படும் ஒருவித சோக வெளிப்பாடே அவலமாகும்.

“ஒய் மச்சான் மம்முதனைக் கொண்டதாட்டம் கொண்டு போட்டுட்டு நானுமில்லே எடுப்பாருமில்லேண்டு பூடுவான். எலும்புக் கூட காட்ட மாட்டான். நீத்துப் போவ வச்சிருவான்”

“இந்தப் பாழாப்போன தோல் ஷாப்புலே நினைவுக் குழியிலே நிண்டு நிண்டு கையும் காலும் அழுவி குட்டம் கண்டதாட்டம் உடம்பு உப்பி ஊட்டுலே கெடக்குதே எங்கப்பன் ஆண்டி சம்பான்…. முடிக்கழிவுலே காலமெல்லாம் நிண்டு மூச்சுத் தெணறி இப்போ ஈழல் நோயாளிகப் போயி பாயும் கையுமா ஆயிப் போச்சுதே எங்க ஆயி அல்ல”[7]

இதுபோன்ற சோக நிகழ்வு அவலங்களை ஆசிரியர் நாவல் முழுவதும் வெளிப்படுத்தியுள்ளார்.

### உரையாடல் நடை

இரண்டு பேர் பேசிக்கொள்வதைப்போல் அமைத்து எழுதுவது உரையாடல் மொழி நடையாகும். அத்தகைய நடை சில இடங்களில் ஆசிரியர் அமைத்துள்ளார்.

“ஒன்னைய மட்டும் தனியா வுட்டுட்டு நா
மட்டும் ஊரை வுட்டுப் போன
முடியுமா மனம் ஒப்புலை அருக்காணி”[8]

“நெசமாவா சொல்லுதே ஓசேப்பு நீ
வேதக்காரன் நான் சேரிப்பறைச்சி
நடக்கிற காரியமா ஊரு ஒப்புமா”

“அப்படி சொல்லாதே அருக்காணி ஒழைச்சி
வவுத்தக் கழுவுற நமக்குள்ள என்ன
வித்தியாசம்…”[9]

இதுபோன்ற உரையாடல் நடையினை நாவலின் பல இடங்களில் காணமுடிகிறது.

### வருணனை நடை

காப்பியங்களுக்குரிய தனிச்சிறப்பு வருணனையாகும் என்கிறார். தண்டியலங்கார ஆசிரியர் இதனையே நாவலுக்கும்- பயன்படுத்துவர். இத்தகைய வருணனையை சில இடங்களில் ஆசிரியர் பதிய வைத்துள்ளார்.

*“காக்கையனுக்கு ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன் போன்று மதிக்க முடியாத வயது, சாறை பாம்பு மாதிரி ஒருப்பூட்டு உடம்பு, அண்டங்காகத்தின் நிறம் என்ற போதிலும் தில்லை சபாபதி உயிர் பெற்று வந்துவிட்டது போன்ற உருவம்”*[10]

இது அழகிய வருணனையால் பல இடங்களை இரசிக்கவும் செய்துள்ளார் ஆசிரியர்.

### முடிவுரை

தோல் நாவலில் செல்வராஜ் அவர்கள் நாவலுக்கேற்ற மொழிநடையை மிகவும் சிறப்பாக அமைத்து நாவலுக்கு வலிமை சேர்த்துள்ளார். உவமை நடை, வருணனை நடை, பிறமொழி நடை, பழமொழி நடை, அவல நடை, உரையாடல் நடை முதலான பல நடைத்திறனுடன் அமைத்து தோல் நாவல் சிறப்படைந்துள்ளது.

### சான்றெண் விளக்கம்

1. டி. செல்வராஜ், கி. லோகேஸ்வரி, ப. 49.
2. டி. செல்வராஜ், தோல், பக். 544-545.
3. மேலது., ப. 2.
4. மேலது., ப. 4.
5. மேலது., ப. 25.
6. மேலது., ப. 13.
7. மேலது., ப. 17.
8. மேலது., ப. 21.
9. மேலது., ப. 22.
10. டி. செல்வராஜ், கி. லோகேஸ்வரி, ப. 50.